**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I COURT, PADMANABHAPURAM**

## DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure, 1973/Chapter XXV of BNNS 2023, and Rule 42 and Judicial Form No. 53 of Criminal Rules of practice 2019 )

**STC.No. 694/2022 P.W. 4/L.W.6**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | திரு. வேலுபிள்ளை | **Taluk** | : | |
| **Father's Name** | : | த/பெ. பாஸ்கர பிள்ளை | **Age** | : | |
| **Address** | : | | | | |
| **Phone No.** | : | | | | |

**Solemnly affirmed in accordance with the provisions of Section 4 of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day 08.06.2026**

**அரசுத்தரப்பு முதல் விசாரணை :**

**குற்றம் சுமத்தப்பட்ட நபர் ஆஜர். குற்றம் சுமத்தப்பட்ட நபர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜர்**

1. நான் தற்போது கிருஷ்ணமங்கலம் முகவரியில் வசித்து ஈபியில் தற்காலிகமாக வேலை செய்து வருகிறேன். கடந்த 06.07.2022ம் தேதி மாலை 05.30 மணிக்கு நான் களியங்காட்டில் வேலை செய்து கொண்டிருந்த போது போலீசார் என்னை போன் மூலமாக காவல் நிலையத்திற்கு அழைத்தார்கள். காவல் நிலையத்திற்கு வந்த பிறகு தான் போலீசார் எனது அக்கா மகனை கஞ்சா வழக்கில் பிடித்து வைத்திருந்த விவரம் தெரிந்தது. போலீசார் அப்போது ஒரு தாளில் கையொப்பம் வாங்கினார்கள். கையொப்பம் செய்தால் தான் எனது அக்கா மகனை விடமுடியும் என்று சொன்னதால் நான் கையொப்பம் செய்தேன். வழக்கு பற்றி வேறு எதுவும் தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

2. நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் பார்வை மகசர் ஆவணத்தில் முதலாவதாக உள்ள சாட்சி கையொப்பம் என்னுடையது தான். **பார்வை மகசர் ஆவணத்தில் முதலாவதாக உள்ள சாட்சி கையொப்பம் அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலீசார் கையொப்பம் கேட்டதால் கையொப்பம் செய்தேன். போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**<u>சாட்சி பகுதி பிறழ்சாட்சியாக கருதப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

கடந்த 06.07.2022ம் தேதி மாலை 05.30 மணிக்கு நானும் சதாசிவன்பிள்ளை என்பவரும் சொந்த வேலையாக சாஸ்தா மங்கலத்தில உள்ள சாம்பவர் சமுதாய மயான கட்டிடத்தின் அருகில் வரும் போது தக்கலை போலீசார் மேற்படி சம்பவ இடமான மயான கட்டிடத்தின் அருகாமை மற்றும் அதன் சுற்றுப்புறங்களில் எங்கள் முன்னிலையில் பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்ததாகவும் அந்த ஆவணத்தில் நானும் சதாசிவன்பிள்ளையும் சாட்சிகளாக கையொப்பம் செய்ததாகவும், போலீசார் விசரணையில் கூறிவிட்டு தற்போது குற்றம் சுமத்தப்பட்ட நபருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>குற்றம் சுமத்தப்பட்ட நபர் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

நான் எதற்கு கையொப்பம் செய்தேன் என்றும், அதில் என்ன எழுதப்பட்டிருந்தோ என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். என்னுடன் எத்தனை நபர்கள் கையொப்பம் செய்தார்கள் என்றால் சதாசிவன்பிள்ளை என்பவர் கையொப்பம் செய்தார். நானும் சதாசிவன்பிள்ளையும் காவல் நிலையத்தில் வைத்து தான் கையொப்பம் செய்தோம் என்றால் சரிதான். போலீசார் கேட்டுக் கொண்டதால் தான் கையொப்பம் செய்தோம் என்றால் சரிதான். போலீசார் கேட்டுக் கொண்டதால் தான் சதாசிவன் பிள்ளையை நான் கையொப்பம் செய்ய சொன்னேன் என்றால் ஆமாம்.

குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது.

**<u>மறுவிசாரணை:</u>**

மறுவிசாரணை இல்லை.

Taken down by me/before me in open court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct.

Judicial Magistrate No.I
Padmanabhauram .

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I COURT, PADMANABHAPURAM

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure, 1973/Chapter XXV of BNNS 2023, and Rule 42 and Judicial Form No. 53 of Criminal Rules of practice 2019 )

**STC.No. 694/2022 P.W. 3/L.W.3**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | திரு. சதாசிவம்பிள்ளை | **Taluk** | : | |
| **Father's Name** | : | த/பெ. ஈஸ்வர பிள்ளை | **Age** | : | |
| **Address** | : | | | | |
| **Phone No.** | : | | | | |

**Solemnly affirmed in accordance with the provisions of Section 4 of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day 08.06.2026**

**அரசுத்தரப்பு முதல் விசாரணை :**

**குற்றம் சுமத்தப்பட்ட நபர் ஆஜர். குற்றம் சுமத்தப்பட்ட நபர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜர்**

1. நான் தற்போது கிருஷ்ணமங்கலம், முகவரியில் வசித்து வாட்டர் சப்ளை வேலை செய்து வருகிறேன். கடந்த 06.07.2022ம் தேதி மாலை 05.00 மணிக்கு குற்றம் சுமத்தப்பட்ட நபரின் மாமா வேலுபிள்ளை என்னை காவல்நிலையத்திற்கு வர சொன்னார். காவல்நிலையத்தில் கையொப்பம் போட சொன்னார்கள். அதனால் கையொப்பம் செய்தேன். அதன் பிறகு தான் கஞ்சா கேஸ் என்று சொன்னார்கள். வழக்கு பற்றி வேறு எதுவும் தெரியாது.

2. நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் பார்வை மகசர் ஆவணத்தில் இரண்டாவதாக உள்ள சாட்சி கையொப்பம் என்னுடையது தான். **பார்வை மகசர் ஆவணத்தில் இரண்டாவதாக உள்ள சாட்சி கையொப்பம் அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலீசார் கையொப்பம் கேட்டதால் கையொப்பம் செய்தேன். போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**சாட்சி பகுதி பிறழ்சாட்சியாக கருதப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

கடந்த 06.07.2022ம் தேதி மாலை 05.30 மணிக்கு நானும் வேலுபிள்ளை என்பவரும் சொந்த வேலையாக சாஸ்தா மங்கலத்தில உள்ள சாம்பவர் சமுதாய மயான கட்டிடத்தின் அருகில் வரும் போது தக்கலை போலீசார் மேற்படி சம்பவ இடமான மயான கட்டிடத்தின் அருகாமை மற்றும் அதன் சுற்றுப்புறங்களில் எங்கள் முன்னிலையில்

பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்ததாகவும் அந்த ஆவணத்தில் நானும் வேலுபிள்ளையும் சாட்சிகளாக கையொப்பம் செய்ததாகவும், போலீசார் விசரணையில் கூறிவிட்டு தற்போது குற்றம் சுமத்தப்பட்ட நபருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>குற்றம் சுமத்தப்பட்ட நபர் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

நான் எதற்கு கையொப்பம் செய்தேன் என்றும், அதில் என்ன எழுதப்பட்டிருந்தோ என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். என்னுடன் எத்தனை நபர்கள் கையொப்பம் செய்தார்கள் என்றால் வேலுபிள்ளை என்பவர் கையொப்பம் செய்தார். நானும் வேலுப்பிள்ளையும் காவல் நிலையத்தில் வைத்து தான் கையொப்பம் செய்தோம் என்றால் சரிதான். போலீசார் கேட்டுக் கொண்டதால் தான் கையொப்பம் செய்தோம் என்றால் இல்லை. வேலுபிள்ளை சொன்னதால் கையொப்பம் செய்தேன்.

குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது.

**<u>மறுவிசாரணை:</u>**

மறுவிசாரணை இல்லை.

Taken down by me/before me in open court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct.

Judicial Magistrate No.I
Padmanabhauram .

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I COURT, PADMANABHAPURAM

## DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure, 1973/Chapter XXV of BNNS 2023, and Rule 42 and Judicial Form No. 53 of Criminal Rules of practice 2019 )

**STC.No. 694/2022 P.W. 2/L.W.4**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | திரு. மகேஷ் பாபு | **Taluk** | : | |
| **Father's Name** | : | த/பெ.ஆறுமுகம் பிள்ளை | **Age** | : | |
| **Address** | : | | | | |
| **Phone No.** | : | | | | |

**Solemnly affirmed in accordance with the provisions of Section 4 of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day 08.06.2026**

**அரசுத்தரப்பு முதல் விசாரணை :**

**குற்றம் சுமத்தப்பட்ட நபர் ஆஜர். குற்றம் சுமத்தப்பட்ட நபர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜர்**

1. நான் தற்போது கிருஷ்ணமங்கலம், காட்டுவிளை முகவரியில் வசித்து ஆட்டோ டிரைவராக வேலை செய்து வருகிறேன். குற்றம் சுமத்தப்பட்ட நபரை எனக்குத் தெரியும். அவர் எனது பக்கத்து ஊர்க்காரர் ஆவார். குற்றம் சுமத்தப்பட்ட நபரின் அம்மா குற்றம் சுமத்தப்பட்ட நபரை காவல்நிலையத்தில் பிடித்து வைத்திருப்பதாக சொல்லி அவரை அழைத்துச் கொண்டு செல்ல சவாரிக்கு அழைத்தார்கள். அப்போது நான் காவல் நிலையம் சென்றேன். போலீசார் கஞ்சா வழக்கில் பிடிப்பட்டிருப்பதாக சொன்னார்கள்.

2. நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலம் ஆவணத்தில் முதலாவதாக உள்ள சாட்சி கையொப்பம் என்னுடையது தான். **அந்த கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலீசார் கையொப்பம் கேட்டதால் கையொப்பம் செய்தேன். போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**சாட்சி பகுதி பிறழ்சாட்சியாக கருதப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

கடந்த 06.07.2022ம் தேதி மாலை 04.00 மணிக்கு நானும் செல்வராஜ் மகன் தேவகுமாரன் ஆகியோர் தக்கலை காவல் நிலையத்தில் நிற்கும் போது கஞ்சா விற்றதாக பிடித்து வைத்திருந்த நிதிஷ் என்பவரை எங்கள் முன்னிலையில் எவ்வித அச்சுறுத்தலோ, துன்புறுத்தலோ, ஆசை வார்த்தைகளோ இன்றி அவர் நடந்ததை கூற

நிதிஷ் கேரளாவில் இருந்து 800 கிராம் கஞ்சா வாங்கி வைத்து சிறு சிறு பொட்டலங்கள் போட்டு விற்பதற்காக TN 75 AE 8484 Bajaj NS 100 இருசக்கர வாகனத்தில் சாஸ்தா மங்கலம் என்ற இடதடில் நிற்கும் போது தக்கலை காவல்நிலைய போலீசார் நிதிஷை பிடித்ததாகவும், இருசக்கர வாகனத்தில் இருந்து 800 கிராம் எடை கொண்ட கஞ்சாவையும், இருசக்கர வாகனத்தையும் போலீசார் கைப்பற்றியதாக நிதிஷ் சொன்னதாகவும் அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் நானும் தேவகுமாரனும் சாட்சிகளாக கையொப்பம் செய்ததாகவும், போலீசார் விசரணையில் கூறிவிட்டு தற்போது குற்றம் சுமத்தப்பட்ட நபருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>**குற்றம் சுமத்தப்பட்ட நபர் தரப்பில் குறுக்கு விசாரணை**</u>

எதற்கு கையொப்பம் செய்தேன் என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. நான் கையொப்பம் செய்த தாளில் என்ன விவரங்கள் எழுதப்பட்டிருந்தது என்று தெரியுமா என்றால் தெரியாது. என்னுடன் வேறு யார் கையொப்பம் செய்தார்கள் என்றால் வேறு யாரும் கையொப்பம் செய்யவில்லை.

குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது.

<u>**மறுவிசாரணை:**</u>

மறுவிசாரணை இல்லை.

Taken down by me/before me in open court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct.

Judicial Magistrate No.I
Padmanabhauram .